www.tamilarangam.net

# ஈழச் செய்தி

# NEWS OF EELAM

EPIC

POST BAG 5551, MADRAS 600 094 INDIA.

மலர் : 1 டிசம்பர், 1981 இதழ் : 1

இலங்கையில் கடந்த முப்பத்து மூன்று வருடங்களாக ஈழதேசத்தின் மீதும், ஈழத் தேசிய இனத்தின் மீதும் ஸ்ரீலங்கா அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட தேசிய அடக்குமுறை இன்று புதிய வடிவம் எடுத்துள்ளது. இதை எதிர்த்துப் போராடவும், விடுதலையடையவும் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் தயாராகி விட்டனர்.

தமது ஜனநாயக உரிமையான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் ஜனநாயக - முற்போக்குச் சக்திகளைத் திரட்டி வருகின்றனர்.

அந்த வகையில் உலகளாவ தேசிய அடக்குமுறை பற்றியும், ஈழமக்களின் போராட்டம் பற்றியும் செய்திகளை அளிக்கும் நோக்கமாகவே இந்த 'ஈழச் செய்தி' மடலை வெளியிடுகிறோம்.

- 0 -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்ரீலங்கா அரசின்
'தீ வைப்பு' நாடகம்!

- 0 -

"லண்டனிலுள்ள ஸ்ரீலங்கா தூதரகத்தின் ஒரு பகுதி தீக்கிரையானது; ஸ்ரீலங்காவில் இனக்கலவரம் நடப்பதாக உலகத்திற்குக் காட்டுவதே இதன் நோக்கமாகும். அதற்காகவே திட்டமிடப்பட்ட செயலாகும் இது" என்று நாடாளுமன்றத்தில் பிரதமர் பிரேமதாசா அறிவித்துள்ளார்.

லண்டன் ஹைட்பார்க் கார்டனில் இருக்கும் ஸ்ரீலங்கா தூதரகத்தில் நடந்த இச்சம்பவம் 21.8.1981 அதிகாலை நடைபெற்றுள்ளது.

இதைத் தொடர்ந்து, மற்றைய நாடுகளிலுள்ள ஸ்ரீலங்கா தூதரங்களிடம் மேலதிகப் பாதுகாப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும்படி ஸ்ரீலங்கா அரசு உத்திரவிட்டுள்ளது.

இத் தீ விபத்துத் தொடர்பாக, ஸ்கொட்லண்ட் யாட், மெற்றோ-போலிற்றன் போலீஸாரை விசாரணை நடத்தும்படியும் கேட்டுக் கொண்டுள்ள-தாகவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை நடத்துவதற்கு உதவியாக, அரசு பயங்கர-வாதத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்து இளைஞர்களைப் பற்றிய விபரங்களையும் படங்களையும் உயர் மட்டப் போலீஸ் அதிகாரிகள் குழு எடுத்துச் செல்ல-விருப்பதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் வெளிநாடுகளிலுள்ள ஸ்ரீலங்கா தூதரகங்களுக்கு, அதிகப்-படியான பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவே, ஸ்ரீலங்கா அரசே திட்டமிட்டு லண்டனிலுள்ள ஸ்ரீலங்கா தூதரக அதிகாரிகள் மூலம் இந்தத் 'தீ வைப்பை' ஏற்படுத்தியது என நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

- 0 -

விடுதலைப் போராளிகளின்
முயற்சிக்கு ஆப்பு

- 0 -

உலக நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழ விடுதலைப் போராளிகளின் முயற்சிகளை முறியடிக்க, ஸ்ரீலங்கா அரசுக்கு உதவியளிக்க சர்வதேசப் போலீஸ் ஸ்தாபனம் (இன்டர்போல்) இணக்கம் தெரிவித்துள்ளதாகப் பிரான்சில் நடைபெற்ற இன்டர்போல் மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பிய போலீஸ் மா அதிபர் அனா செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

- 0 -

"ஸ்ரீ லங்கா அரசே திட்டமிட்டுச் செய்தது"

- 0 -

"யாழ்ப்பாணத்திலும், அம்பாறையிலும் நடந்த வன்முறைகளுக்குக் காரணம் அரசின் காவல்துறையேயாகும். ஈழத் தமிழர்களை அச்சுறுத்தி அடக்குவதன் மூலம் தனி நாட்டுக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் கைவிட வேண்டும் என்பதே அரசின் நோக்கம்."

"சிங்கள மக்கள் திரண்டெழுந்து தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரம் நடத்தவில்லை. காவல்துறையினர் மாறுடையில் சென்று புரிந்துள்ள அட்டூழியம்தான் இரண்டு பகுதிகளிலும் நிகழ்ந்துள்ளன என்பதுதான் உண்மை".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆறு மாதங்கட்கு ஈழக் கோரிக்கை பின் போடப்பட்டது.

- 0 -

தமிழர் விடுதலைக் கூட்டணி 6 மாதங்களுக்கு தமிழ் ஈழம் பற்றிப் பேச மாட்டோம் என்னும் இணக்கத்துடன் ஜனாதிபதி ஜெயவர்த்தனா உடன் பேச்சு வார்த்தை நடாத்தி வருகின்றனர். இதனால் தமது பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிட்டு மீண்டும் பாராளுமன்றம் சென்றுள்ளனர். இவர்களை அரச உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆனால் கூட்டணியின் இம்முடிவுக்கு எதிராயும் கூட்டணி அரசாங்கத்துடன் நடத்தும் சமாசப் பேச்சு வார்த்தையை மிக வன்மையாகக் கண்டித்தும் வடக்கில் பிரமாண்டமான சுவரொட்டிகள் திடீரெனத் தோன்றியுள்ளன. இதைப்பற்றி கூட்டணி வட்டாரங்கள் கூறுகையில் இலண்டனின் இயக்க ஆதரவு பெற்ற சிறு கும்பலின் செயல் எனக் கூறியதாக அரசாங்கப் பத்திரிகை மூன்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் இச்சுவரொட்டிகள் 'ஈழ மாணவர் பொது மன்றம்' ( GUES ) இனாலும், தொழிலாளர் கழகங்களாலும் ஒட்டப்பட்டுள்ளன.

- 0 -

## மாவட்ட அபிவிருத்திச் சபையைப் பற்றி கூட்டணித் தலைவர்கள்

- 0 -

"மா.அ.சபைகளுக்கு விசேசமாக எதுவுமில்லை"
— கூட்டணித் தலைவர் சிவா.

"மா.அ.சபைகளில் நம்பிக்கை இழந்து விட்டோம்"
— யாழ் மா.அ.ச.தலைவர் நடராசா.

"மா.அ.சபைகளினால் தமிழர்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படவில்லை"
— மட்டுநகர் மா.அ.ச.தலைவர் சம்பந்த மூர்த்தி.

"மா.அ.சபைகள் ஏற்பாடு வெறும் கண் துடைப்பு; காற்றடைத்த பை; அவற்றின் அதிகாரம் வெறும் ஏட்டளவில்தான்"
— வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர்

"மா.அ.சபைகளில் நாம் முழு நம்பிக்கையும் இழந்து விட்டோம். இச்சபை சிறகில்லாத பறவை போன்றது. ஒரு கணவன் மனைவியிடம் இருந்து விவாகரத்துப் பெறும் வரை அவளுடன் வாங்க வேண்டி இருப்பது போன்றதே எமது நிலை".
— யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்.

- 0 -

## ஈழப் பொருளாதாரத்தை அழிக்க ஸ்ரீலங்கா அரசு முயற்சி

- 0 -

ஈழப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை அழித்துத், தமிழ் பேசும் மக்கள் வாழ்வை சீர்குலைக்க ஸ்ரீலங்கா அரசு பல்வேறு வகையில் முயற்சித்து வருகிறது.

ஈழத்தின் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூட முயற்சிப்பதும் இவற்றுள் ஒன்றாகும். இந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டு, ஸ்ரீலங்கா பகுதியில் நிறுவ ஸ்ரீலங்கா அரசு முயற்சித்து வருகிறது. மூடுவதற்கு முயற்சி எடுப்பிக்கா ஸ்மாமல், திருகலத் தொழிலாளர் பலரை வேலைக்கு அமர்த்தியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதை எதிர்க்கும் தொழிற்சங்கத் தலைவர்களைச் சிறையில் அடைத்தும் வருகின்றது, இதை எதிர்த்துப் புரந்தன் தமிழ் தொழிலாளர்கள் போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டம் ஒரு தொழிற் சங்கப் பிரச்சினை என்று கூறிக் கூட்டணி மௌனம் சாதிக்கின்றது. ஈழ மக்களும், தொழிலாளர்களும், இது ஈழப் பொருளாதாரத்தை அரசு தொடர்ந்து அழித்து வருவதன் ஓர் அம்சமே என்றும், இது ஈழத் தேசத்தவரின் தேசியப் பிரச்சினை என்றும் கருதுகின்றனர். போராட்டத்தைத் தொடர்ந்து 1981ம் ஆண்டு நவம்பர் 25ம் திகதிக்குப் பின் வேலைக்குச் சமூகமளிக்காத ஊழியர்களை பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டவர் எனப் பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனத் தலைவரும், முகாமையாளருமான எம். வை. அபேவர்த்தனா, பத்திரிகை வானொலிச் செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக ஈழ மாணவர் பொதுமன்றம் (          ) சுவரொட்டிகளை வடபகுதி எங்கும் ஒட்டிப் பிரசாரம் செய்து வருகிறது.

அந்தச் சுவரொட்டிகளில் பின்வரும் சுலோகங்கள் இடம்பெற்றுள்ளன:

** பரந்தன், சீநோர் தொழிற்சாலைகளைப் பாதுகாக்க அபிவிருத்திச் சபையால் முடியாது.

** ஈழ தேசத்தவர்களே. பரந்தன் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு அளிப்போம்.

** அபிவிருத்திச் சபையின் ஆகக் கூடிய அதிகாரம் கள்ளுக் கொட்டில்களுக்கு நேரம் குறிப்பதே.

** தொழிலாளரே, இந்த அதிகாரமற்ற சபையையும், கூட்டணியையும் நம்பி ஏமாறாதீர்.

** சிங்கள இனவெறி பாசிச அரசே ஈழத் தொழிலாளர் மீது கை வையாதே.

** ஈழத் தொழிலாளர் புரட்சிப் போராட்டம் வெல்க!

## <u>தொழிலாளர்கள் வேலை நீக்கம்</u>

ஈழத்தின் தொழிற்சாலைகளை மூட ஸ்ரீலங்கா அரசு செய்யும் சதியில் விழுந்த மற்றொரு தொழிற்சாலை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையாகும்.

இந்தத் தொழிற்சாலையில் ஒரு வருட காலமாக வேலை செய்து வந்த 300 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். 1.9.1981 அன்று எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, தொழிலாளர்கள் வேலைக்கு வந்தபோது வேலை நீக்கக் கடிதம் கொடுக்கப்பட்டது. அதில் 'உங்கள் சேவைக்கு நன்றி' உங்கள் முகவரியைக் கொடுத்து விட்டுச் செல்லுங்கள்' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தொழிற்சாலையின் ஒரு பகுதியைக் கைத்தொழில், விஞ்ஞானத்துறை அமைச்சர் சிறில் மத்தியு தனியார் கம்பெனி ஒன்றுக்குக் கையளித்தார். இதைத் தொடர்ந்தே இந்த வேலை நீக்கம் நடைபெற்றுள்ளது. 'சீநோர்' தொழிற்சாலையின் ஒரு பகுதியும் தனியாரிடம் கையளிக்கப்பட்டு விட்டது. சீமெந்துத் தொழிற்சாலையில் 60 சதவீத உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளதாகக் கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சு 31.10.1981 பத்திரிகைகளில் பிரசுரித்துள்ளது. இது தவறான செய்தி என்று தொழிற்சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. தொழிலாளர் உழைப்பால் தொழிற்சாலை லாபத்தில் இயங்கி வந்ததாகவும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இனவெறி அரசின் பட்ஜெட்

ஐ.தே.கட்சியின் 5வது பட்ஜெட்டை நிதி அமைச்சர் ரொனி டி மெல் அண்மையில் சமர்ப்பித்தார். உலக வங்கி, உலக நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட இப் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகை 2000 கோடி ரூபாயாகும். இதில் ரூபா 1400 கோடியை வெளிநாட்டுக் கடனாகப் பெற உள்ளது. மிகுதியை வரிகள் மூலம் ஈடுகட்ட உள்ளது. முழுக்க முழுக்க உள்நாட்டு முதலாளித்துவத்தையும், சர்வதேச ஏகபோக முதலாளித்துவத்தையும் பாதுகாக்கவே வழி செய்கிறது, இந்த பட்ஜெட். இந்த பட்ஜெட் விவசாயத் தொழிலாளர், பாட்டாளி, பாமர மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்யப் போவதில்லை.

## இஸ்லாமியத் தமிழர்களுக்கு எதிராகவும் இன்னல்கள்

அம்பாறை, அம்பலத்தாறு என்ற பகுதிகளிலுள்ள இஸ்லாமியத் தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, அப்பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகிறார்கள். அங்கே இஸ்லாமியத் தமிழர்களுக்குப் பள்ளிவாசல் கட்டுவதற்கே ஒதுக்கப்பட்ட இடத்தைச் சிங்கள மக்கள் விளையாட்டுத்தளமாக மாற்றி விட்டனர்.

வேளாமரத்து வெளி, சோலைக் கடம் ஆகிய ஊர்களில் இஸ்லாமியத் தமிழர்களுக்குச் சொந்தமான 80 ஏக்கர் நிலத்தில், சிங்கள மக்கள் அரசினால் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இஸ்லாமியத் தமிழர்கள் வாழும் இன்னும் பல கிராமங்களில் பலவந்தமாகச் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.

## பிரசவ வேதனையில் இராணுவத்தின் சாதனை

28.10.1981 அன்று யாழ் நல்லூர் கோயிலடியில் வந்து போகும் வாகனங்களை இராணுவ வீரர்கள் நிறுத்தி அருவி சோதனை செய்து கொண்டிருந்தார்கள். பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்த பெண் ஒருவரைச் சுமந்து கொண்டு வந்த காரையும் நிறுத்தினர். வேதனையில் கதறும் பெண்ணைக் கண்டும் கலங்கவில்லை இராணுவ வீரர்கள்; கண்டு களித்தனர். அந்தப் பெண்ணின் கதறுதலுக்கு மத்தியில் குழந்தை பிரசவிக்கத் தொடங்கும் போதுதான் காரை நகர விட்டனர்.

## இராணுவ அட்டூழியங்களின் செய்தித் தொகுப்பு

1. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப் படையினால் 118 தமிழ்க் குடும்பங்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. அவர்களின் வயல்கள், கால்நடைகள் மிருகத்தனமாக அழிக்கப்பட்டன. மன்டூர் அகதிகள் முகாமில் 500 குடும்பங்களும், கல்லாறு அகதிகள் முகாமில் 500 குடும்பங்களும் அக்கரைப்பற்றில் 200 குடும்பங்களும் அகதிகளாக உள்ளன.

2. 31.10.1981 பண்டத்தரிப்பு சந்தை ஒன்றும், பெட்டிக் கடையொன்றும் ஏனைய கடைகளும் டிரக்கில் வந்த இராணுவத்தினரால் நொறுக்கப்பட்டன. மாதகலில் வயோதிபர் தாடி நடராஜா திரு வந்த நடையும் வேறு பல இளைஞர்களும் தாக்கப்பட்டனர்.

3. காரைத்தீவில் அட்டகாசம்: காரைத்தீவில் (மட்டுநகர்) ஆயுதப் படையால் ஏழைத் தமிழ் தொழிலாளியான சின்னத்தம்பி செல்லத்துரை சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் அவரது குடும்பமும் இம்சைக்குள்ளாக்கப் பட்டது. அங்கு இளைஞர்கள் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

www.tamilarangam.net



4. 23.10.1981 தபால் வண்டியில் பயணம் செய்த தமிழ் மக்கள் சிங்கள ஆயுதப் படையால் மிகக் கொடுமையாகச் சித்திரவதைக்கும், இம்சைக்கும், அவமானத்திற்கும் உட்பட்டனர். சொத்துக்கள் பறிமுதலாகின. இளைஞர்களின் தலைகள் இரயில் கதவுகளுடன் மோதப்பட்டது.

5. (28.10.'81) பண்டத்தரிப்பு பொ. இராஜகுலேந்திரன் (35 வயது) பருத்தித்துறை ஞானராசாவின் தந்தை ஆகியோர் இராணுவத்தால் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். யாழ் வர்த்தகர் சுப்பிரமணியம் இராசையாவும் தனது வர்த்தக நிலையத்தை மூடி விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கையில் இராணுவத்தால் மோசமாகத் தாக்கப்பட்டார். முல்லைத் தீவு பா.உவின் செயலாளர் வே. செந்தில் நாதன் முல்லைத் தீவு இராணுவத்தால் கொடுமையாகத் தாக்கப்பட்டார். இவருடன் சென்ற முடியப்பு என்றவரும் தாக்கப்பட்டார்.

6. (27.10.'81) மட்டக்களப்பு மாநகர முன்னாள் உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு பாசிக்குடா சென்று மகள், மருமகளுடன் திரும்புகையில் இராணுவத்தால் மறிக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளானதால் காருக்குள்ளேயே மரணமானார்.

7. 28, 29.10.'81 ஆகிய திகதிகளில் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலைக்குச் சென்று கொண்டிருந்த, தொழிலாளர் இராணுவத்தால் வெறித்தனமாய்த் தாக்கப்பட்டனர்.

8. குரும்பசிட்டியில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பேரம்பலம், சங்கரப்பிள்ளை, விக்கினேஸ்வரராஜா ஆகியோர் படுகாயம் அடைந்தனர். இதில் பேரம்பலம் மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ளார்.

9. வெடி மருந்து நிபுணர் ஒருவரும், மற்றும் வவுனியாப் பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள காட்டில் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

- 0 -

செத்தவீட்டிலும் சுற்றும்
இனவெறி

- - -

காவத்தை வன்செயலில் வெந்தாச்சி மட்டத்தைச் சேர்ந்த வீரகுட்டி உயிர் இழந்தார். அவரது சடலத்தை எதிர்பார்த்து குடும்பத்தினர் காத்திருந்தனர். வீட்டில் குத்துவிளக்கு எரிகிறது; வெளியே துக்கத்தைப் பிரதிபலிக்கும் வெள்ளைக் கொடிகள். துக்கம் விசாரிக்க பலர் வந்தவண்ணம் இருக்கிறார்கள். அங்கும் இனவெறி ஆட்சியாளரின் ஆயுதப்படையின் அட்டகாசம் ஓயவில்லை. துக்கம் விசாரிக்க வந்தவர்களைத் துரத்தியடித்தனர்; வெள்ளைக் கொடிகளைக் கிழித்தெறிந்தனர்.

காவத்தை கலவரத்தில் உயிருடன் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட வீரகுட்டியின் சடலத்தையோ, அவரோடு உயிரிழந்த கந்தசாமியின் சடலத்தையோ விசாரணையோ, உறவினர்களின் சம்மதமோ இன்றி போலீஸாரே புதைத்து விட்டனர்.

- 0 -

குருந்தூர் மலையில் சிங்களக்
குடியேற்றம்?

- 0 -

முல்லைத் தீவிலுள்ள குருந்தூர் மலையிலிருக்கும் வைரவர் கோயிலுக்கு அருகில் பௌத்த விகாரை கட்டவும், அதைச் சுற்றியுள்ள பகுதியில் சிங்கள பௌத்த மக்களைக் குடியேற்றவும் சிங்கள இனவாத அமைச்சர் ஒருவர் திட்டமிட்டு வருவதாக அப்பகுதி தமிழ் மக்கள் கவலை கொண்டுள்ளார்கள்.

அந்த மலையில் வைரவசூலம் ஒன்றை வைத்துத் தமிழ் மக்கள் வழிபட்டு வருகின்றனர். இப்போது கூடவே அரசு அதிகாரிகள் கட்டிடம் கட்டுவதற்காகப் பொருட்களைக் கொண்டு வந்து குவித்துள்ளார்கள். இத்தோடு

வட, கிழக்கு மாகாணங்களில் பௌத்த இடபாடுகளையும் பாதுகாக்கும் அமைச்சர் ஒருவரும் வந்து அப்பகுதியைப் பார்வையிட்டுள்ளதால் இப்பகுதித் தமிழ் மக்களுக்கு ஐயமும், அச்சமும் ஏற்பட்டுள்ளது.

- 0 -

ஈழத்தை நோக்கி மலையகத் தமிழர்கள்.

- 0 -

ஸ்ரீலங்கா பிரதேசத்திலிருந்து ஈழப் பிரதேசத்துக்கு இதுவரை ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மலைநாட்டுத் தமிழர்கள் வந்து ... குடியேறியுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் 20,001 பேரும்
வவுனியா மாவட்டத்தில் 19,000 பேரும்
மன்னார் மாவட்டத்தில் 14,000 பேரும்
முல்லைத் தீவு மாவட்டத்தில் 21,000 பேரும்
திருகோணமலை மாவட்டத்தில் 7,000 பேரும்
மட்டக்களப்பு மாவட்டத்தில் 4,000 பேரும்

குடியேறியுள்ளனர். கணக்கிடப்படாதவர்களையும் சேர்த்து 1 லட்சம் பேர் குடியேறி இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச பயங்கரவாதங்களினால், பாதிக்கப்பட்ட, பாதுகாப்பற்ற நிலையிலுள்ள மலையகத் தமிழர்கள் தொடர்ந்து குடியேறிய வண்ணம் இருக்கிறார்கள்.

இந்தக் குடிபெயர்ச்சியினால், மலையகத்தில் இ.தொ.காவுக்கும், மற்றைய பிற்போக்கு தொழிற்சங்கங்களுக்கும், அத்துடன் முற்போக்கு முத்திரையிட்டுக் கொண்ட சிறு கும்பல்களுக்கும் கிலி பிடிக்கத் தொடங்கியுள்ளது. அரசியல் ரீதியான லாபநட்டத்தையே கொள்கையாகக் கொண்ட இவர்கள் தொடர்ந்து மலையகத் தமிழர்களை, சிங்களப் பேரினவாதத்திற்குப் பலி கொடுக்கவே திட்டமிட்டு வருகிறார்கள். அடுத்த தேர்தலிலும் இவர்களைப் பகடைக் காய்களாக உருட்ட வேண்டிய அவசியம் ஆளும் யு.என்.பி.கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக மலையகத் தமிழ் மக்கள் ஒரு தனித் தேசிய இனம் என்ற போலி வாதத்தை முன் வைத்து நடாத்தும் அரசியலுக்கு பக்க பலமாக இருப்பதோடு, தொடர்ந்து மலையகத்திலேயே அவர்களை வைத்திருக்க 'முயற்சிக்'கிறது. இது மலையகத் தமிழர்களையும், வட-கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களையும் பிரிப்பதற்கு ஜயவர்த்தனாவும், தொண்டமானும் செய்யும் கூட்டுச் சதியாகும்.

மேற்படி வட-கிழக்கு மாகாணங்களுக்கு வந்து தஞ்சமடைந்து, குடியேறும் மலையகத் தமிழர்களுக்கு, ஈழ மாணவர் பொதுமன்றம், வட-கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து உணவு, உடை, நிதி முதலியனவற்றை சேகரித்து மலையகத் தமிழ் மக்களுக்கு வழங்கிப் பல உதவிகளைச் செய்து வருகிறது.

- 0 -

உலகத் தமிழீழ மாநாடு

உலகத் தமிழீழ மாநாடு 1982ம் ஆண்டு ஜூலை மாதம் 3, 4ந் திகதிகளில், அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நுவட், ஹெரால்டே இன் மாநாட்டு அரங்கில் நடைபெறவிருக்கிறது. தமிழீழ விடுதலைக்காக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல நடவடிக்கைகள் இந்த மாநாட்டில் மேற்கொள்ளவிருப்பதாக மாநாட்டு அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, 1982 ஜனவரி 14இல் சுதந்திர தமிழீழப் பிரகடனத்தை மேற்கொள்ளும் குறிப்பிட்ட குழுவின் மீது தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா அரசு தனது உளவுப் படைக்குப் பணித்துள்ளது. இதன்படி 'பிரிவினைவாதி'களின் நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசின் உளவுச் சேவையினரின் ஒரு விசேடப் பிரிவினர் கண்காணித்து வருகின்றனர். நமக்குத் தமிழர் ... ஏற்பட்டுள்ள புதிய ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

- 0 -

## மாணவர் எழுச்சிப் பேரணிகள்

- 0 -

அண்மையில் ஈழத்தில் நடந்த இன ஒடுக்கலைக் கண்டித்து, ஈழத் தமிழ் பேசும் மக்களுக்கு ஆதரவாகத் தமிழகத்தின் தலைநகர் சென்னையில் அனைத்துக் கல்லூரி மாணவர்களின் பேரணி நடைபெற்றது. 1965-ல் மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்பு எழுச்சிக்குப் பிறகு மாணவர்கள் கண்ட மிகப் பெரிய எழுச்சி இதுவாகும். இதைத் தொடர்ந்தே தமிழகத்தின் அரசியல் கட்சிகள், ஜனநாயக அமைப்புகள், சிங்கள இனவெறி அரசுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பின.

இந்த மாணவர் ம பேரணியை ஈழ மாணவர் பொதுமன்றத்தின் இந்தியக் கிளை ஏற்பாடு செய்தது. இதேபோன்று இந்தியத் தலைநகர் டெல்லியிலும் நடத்தியது.

ஈழ மாணவர் பொது மன்றத்தின் லண்டன் கிளை, லண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியது.

ஈழத் தேசிய இன ஒடுக்கலின் ஒரு வடிவமான மலையகத் தமிழரை நாடுகடத்தும் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் 1981 அக்டோபர் 31 உடன் காலவதியாகி விட்டது. இதை மீண்டும் தொடர்வதற்கான நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதைக் கண்டித்து ஈழ மாணவர் பொது மன்றம் போராடப் போவதாக தெரிய வருகின்றது.

- 0 -

வெல்க ஈழ மக்கள் விடுதலைப் போராட்டம்!

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

இப்பிரசுரம், ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்திற்காக வள்ளிநாயகம் அவர்களால் வெளியிடப்பெற்றது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

PRINTED MATTER

திரு. செல்வராச B.A., B.L.,
17, வயல் காட்டு வீதி,
கோரிப்பாளையம்
மதுரை.

EPIC
POST BAG. 5551
MADRAS - 600094

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்